புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • DECEMBER, 11 2025 • புரட்சி 25 • முழக்கம்(ISSUE) 50 • விலை(PRICE) ரூ.6.00

# நீதிபதியே மதக்கலவரத்தைத் தூண்டலாமா? ஜி.ஆர். சுவாமிநாதனைப் பதவி நீக்கம் செய்!

## சென்னை, திருப்பூர், ஈரோட்டில் கழகம் ஆர்ப்பாட்டம்!

திருப்பரங்குன்றம் மலையில் கார்த்திகை தீபத்தை ஒட்டி வழக்கமான உச்சி பிள்ளையார் கோயில் பகுதிக்கு மாற்றாக, சிக்கந்தர் பாஷா தர்கா பகுதியில் தீபம் ஏற்ற வேண்டுமென்று, மதக் கலவரத்தை தூண்டும் வகையில் உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட இந்த நீதிபதியின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டு, உறுதியான எதிர்வினையாற்றி, தர்காவிற்கு அருகில் தீபம் ஏற்ற விடாமல் தடுத்து நிறுத்தியது திமுக அரசு. பார்ப்பனர்கள் சாப்பிட்ட எச்சில் இலையில் உருள வேண்டும் என தீர்ப்பளிப்பது, சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிரான கருத்துக்களை உமிழ்வது என தொடர்ந்து மதவாத நஞ்சை விதைக்கும் இந்த ஜி.ஆர்.சுவாமிநாதன் நீதித்துறையில் தொடர இடம் அளிக்கக் கூடாது என நாடு முழுக்க கண்டனங்கள் வலுத்துள்ளன. இவரை நீக்க வேண்டுமென்று திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 107 பேர் கையெழுத்திட்டு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் கடிதம் அளித்துள்ளனர். இவர் ஒரு ஆர்.எஸ்.எஸ். நீதிபதி என்று மக்களவையிலேயே அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்திருக்கிறார் திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு. தீபம் ஏற்றாவிட்டால் கடுமையாக நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்று எச்சரித்த சுவாமிநாதன், நீதிபதி தன் எதிர்ப்புகளைக் கண்டு வழக்கு விசாரணையை ஒத்திவைத்திருக்கிறார். அதேசமயம், தீபத்திருவிழாவே முடிந்த பின்பும் விளக்கு ஏற்றுவது வழக்கம் இல்லை என்று திருப்பரங்குன்றம் கோயில் தரப்பு அளித்த பதிலை, அரசு வாதமாக வைத்தபோது, இது தீபம் ஏற்றும் பிரச்னை மட்டுமல்ல, சொத்துரிமை பிரச்னையும் கூட என தனது ஆர்.எஸ்.எஸ். புத்தியை அப்பட்டமாக வெளிக்காட்டியிருக்கிறார் அவர். இந்த மதவாத நீதிபதி இனியும் பதவியில் நீடிக்கக்கூடாது என்று தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளது திராவிடர் விடுதலைக் கழகம். அந்த செய்திகள் கீழே.




**சென்னை:** மதக் கலவரத்தை தூண்டும் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம், டிச-8,2025 காலை 10 மணிக்கு சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் தலைமையில் நடைபெற்றது. சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி ஒருங்கிணைத்தார். பாடகர் வீரமணி இசையில், பெரியார் பிஞ்சு திராவிட மகிழன் பாடல்களைப் பாடினார். தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி, பெரியார் சிந்தனையாளர் இயக்க ஒருங்கிணைப்பாளர் புதுவை தீனா, U2BRUTUS மைனர், இடதுசாரி சிந்தனையாளர் மருதையன் ஆகியோர் கண்டனவுரையாற்றினர்.

மாவட்டத் தலைவர்கள் மா. வேழ வேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன் , மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன் , ந. தட்சிணாமூர்த்தி மாவட்டத் துணைச்செயலாளர்கள் இராவணன், ஆ.வ. வேலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், கடலூர் சிவகுமார், இரண்யா தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், பகுதிச் செயலாளர் சே. ராஜேஷ், பகுதி அமைப்பாளர் த.நா. சூர்யா, மயிலை பகுதித் தோழர்கள் சுகுமார், மனோகர், சிவா, பிரவீன், முழக்கம் செய்தியாளர் பிரசாந்த், கவுதம் ஷாம் (Dravidian Stock பதிப்பகம்), அருள்தாஸ், துரை உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.

**ஈரோடு வடக்கு:** மாவட்டக் கழகத்தின் சார்பில், ‘மதக்கலவரத்தைத் தூண்டும் ஜி.ஆர். சுவாமிநாதனே பதவி விலகு!’ கண்டன ஆர்ப்பாட்டம் டிசம்பர்-7, 2025 ஞாயிறு காலை 11 மணியளவில் கோபி ஜியான் திரையரங்கம் அருகில் நடைபெற்றது. செல்வகுமார் (மாவட்டச் செயலாளர்) தலைமை ஏற்க, வினோத் (பவானி ஒன்றியச் செயலாளர்), ஜெகநாதன் (கோபி ஒன்றியத் தலைவர்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




ஆர்ப்பாட்டத்தில் தமிழர் உரிமைக் கழகம் கந்தசாமி, குரைஷி அப்துல்லா விசிக, பசுபதி (ஆதித்தமிழர் பேரவை) , எஸ் சர்ஜித் ரகுமான் (எஸ்டிபிஅய் தொகுதி செயலாளர்) , ஸ்டாலின் (மே 17), அப்துல்லா (தமிழ்ப் புலிகள் கட்சி), ரமேஷ் (பு.இ.மு), துரையன் (திஇதபே) ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கண்டனவுரையாற்றினர். ஆர்ப்பாட்டத்தின் நோக்கத்தினை விளக்கி கழக மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் சிறப்புரையாற்றினார்.

நிவாஸ் (மாவட்ட அமைப்பாளர்) நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்வில் கழகத் தோழர்கள் மற்றும் விசிக, ஆதித்தமிழர் பேரவை, எஸ்.டி.பி.அய் கட்சி, மே 17, தமிழ்ப் புலிகள் கட்சி, பு.இ.மு, திஇதபே உள்ளிட்ட தோழமைக் கழகத் தோழர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 2-ம் பக்கம்..

# மதவாத கும்பல்களின் கலவர முயற்சிகளை முறியடிப்போம்!

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை!

மதுரை திருப்பரங்குன்றத்தில் கலவரம் செய்ய முயற்சிக்கும் பாஜக இந்து முன்னணி அமைப்புகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்! தமிழ்நாட்டின் பொது அமைதியைக் குலைத்து வன்முறைக் காடாக்கி அதில் அரசியல் லாபம் அடைய முயற்சிக்கும் மத தீவிரவாத கூட்டத்தை அனுமதியோம்! இந்துத்துவ அமைப்புகளின் கலவரம் உருவாக்கும் சூழ்ச்சியை தக்க சமயத்தில் முறியடித்து அமைதியை நிலை நாட்டிக்கொண்டிருக்கும் திராவிட மாடல் அரசின் முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களைப் பாராட்டுகிறோம்! மதவாத சக்திகளுக்கு எதிரான முதல்வரின் நடவடிக்கைகளுக்கு என்றும் துணை நிற்போம்!

"மதுரை திருப்பரங்குன்றம் முருகன் கோயிலில் கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்வு பல நூறு ஆண்டுகளாக தொடர்ச்சியாக முருகன் கோயில் கருவறைக்கு நேர் மேலே இருக்கும் உச்சிப் பிள்ளையார் கோயில் அருகில் இருக்கும் தீபத்தூணில் ஏற்றுவது வழக்கமாக இருந்து வருகிறது.

இதனை திருமலை நாயக்கர் காலத்து கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. மேலும் திருப்பரங்குன்றம் முருகன் கோயில் தலைமை அர்ச்சகர் ராஜா பட்டர், அர்ச்சகர்கள் மற்றும் ஸ்தானிகர்களின் கருத்தும் இதுதான். இந்நிலையில் இந்து தமிழர் கட்சி எனும் அரசியல் கட்சியின் நிறுவனத் தலைவர் ராம. ரவிக்குமார் என்பவர் இந்த வருடம் உச்சிப் பிள்ளையார் கோயில் அருகே தீபம் ஏற்றக்கூடாது, தர்கா அருகில் உள்ள மலை உச்சியில்தான் தீபம் ஏற்ற வேண்டும் என்று அரசியல் உள்நோக்கத்துடன் கோயில் நிர்வாகத்திடம் மனு அளித்தார். அதனை பரிசீலித்த கோயில் நிர்வாகம் பல நூறு ஆண்டுகளாக தீபம் ஏற்றும் உச்சிப் பிள்ளையார் கோவில் அருகே உள்ள தீபத்தூணில் தான் தீபம் ஏற்றுவோம்; இதுதான் கோயிலின் பழக்கவழக்கம் என்று கோயில் ஸ்தானியர்கள் அறிவித்து விட்டனர்.

இதனை ஏற்காமல் ராம ரவிக்குமார் மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் கோயிலின் பழக்கவழக்கங்கள், கல்வெட்டு ஆதாரங்கள், முந்தைய நீதிமன்ற தீர்ப்புகள் எதனையும் கணக்கில் கொள்ளாமல் எதிர்தரப்புகள் தங்கள் தரப்பு வாதங்களை வைக்கக்கூடிய கால அவகாசத்தையும் வழங்காமல், வழக்கமான இடத்தில் தீபத்தை ஏற்றாமல் திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள சிக்கந்தர் தர்கா அருகில் உள்ள தூணின் மீது தீபத்தை ஏற்ற வேண்டும் என்று அவசர அவசரமாக ஒரு உத்தரவைப் பிறப்பிக்கிறார்.



இந்த உத்தரவு சமூகப் பதற்றத்தையும், சட்ட நெருக்கடியையும் ஏற்படுத்தி விட்டது. திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பாக பல வழக்குகள் பிரிட்டிஷார் ஆட்சி காலத்திலும் அதன் பிறகும் பல நேரங்களில் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. 2014 ல் W.P(MD)No.19422 of 2014 மேல் முறையீடு WA(MD)No.1524 of 2014 படி சுப்பிரமணியன் என்பவர் தொடர்ந்த வழக்கில் மதுரை உயர்நீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கல்யாணசுந்தரம், பவானி சுப்பராயன் அமர்வு தற்போதுள்ள வழமையான இடத்தில் தான் தீபம் ஏற்ற வேண்டும் என்று 07.12.2017 அன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

அதன்படி தற்போது வரை அங்கு உச்சிப் பிள்ளையார் கோயில் அருகே தீபம் ஏற்றப்பட்டு வருகிறது. தற்போது நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் தீபம் ஏற்றும் படி உத்தரவிட்டுள்ள தர்கா அருகில் உள்ள தூண் தீபத் தூண் அல்ல. அது Survey of India வால் நிறுவப்பட்ட எல்லைக் கல் ஆகும். இங்கு சென்று தீபம் ஏற்ற தர்காவின் படிக்கட்டுகளை பயன்படுத்தி ஏறலாம் என்று நீதிபதி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு கொடுத்த தீர்ப்பை ஒரு நீதிபதி அளித்த தீர்ப்பு கட்டுப்படுத்தாது என்று சட்ட வல்லுனர்கள் கூறுகிறார்கள்.

இப்படி எதனையும் கணக்கில் கொள்ளாமல் தீர்ப்பை வழங்கியதோடு மட்டுமல்லாமல் அதனை தொடர்ந்து நீதிபதி ஜி ஆர் சாமிநாதன் டிசம்பர் 3 அன்று மாலை 06.00 மணிக்கு தான் சொன்ன இடத்தில் தீபம் ஏற்றாவிட்டால் 06.05 க்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் கடும் நடவடிக்கையும் எடுப்பேன் என்றும் கூறினார். மேலும் நீதிமன்ற பாதுகாப்புக்கு மட்டுமே அதுவும் நீதிமன்ற வளாகத்திற்குள் மட்டுமே செயல்பட வேண்டிய மத்திய தொழிற் பாதுகாப்பு படையை அரசியல் கட்சித் தலைவர் ராம.ரவிக்குமாருடன் அனுப்பி தீபம் ஏற்றலாம் என்று நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதன் கூறியிருக்கிறார். இந்தக் கருத்து வன்மையாக கண்டிக்கத்தக்கது. இது மாநில உரிமைகளில் தலையிடுவதோடு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் இறையாண்மைக்கு சவால் விடும் செயல் ஆகும். இந்த அளவிற்கு மக்களின் மத நம்பிக்கையை அரசியல் காரணங்களுக்காக தவறாக பயன்படுத்தி கலவரத்தை உருவாக்கி அதன் மூலம் அரசியல் லாபம் அடைய நினைக்கும் மதவாத சக்திகளை நாம் மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்துவோம்.

நீதிமன்ற தீர்ப்புகள், அவர்களே சொல்லும் பழக்க வழக்கங்கள், அவர்களே சொல்லும் ஆகம விதிகள், கல்வெட்டு வரலாற்று ஆதாரங்கள், எதிர்த்தரப்பு வாதங்களுக்கு வாய்ப்பு இவற்றை எதையும் கணக்கில் கொள்ளாமல் சமூகப் பதற்றத்தை உருவாக்கும் விதமாக நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனின் தீர்ப்பு அமைந்திருக்கிறது. இது மட்டுமல்ல எச்சில் இலையில் உருளுவது சரி என்று தீர்ப்பளித்தார் இதே ஜி ஆர் சாமிநாதன் அதுவும் மேல்முறையீடு செய்யப்பட்டு அந்த தீர்ப்பை நீதிமன்றம் ரத்து செய்தது.

அரசியல் சட்ட சாசனப்படி மதச்சார்பற்ற தன்மையோடு நடந்து கொள்ள வேண்டிய, எந்த சார்பு தன்மையும் இன்றி நடுநிலையோடு தீர்ப்பு வழங்க வேண்டிய நீதிபதியாக இருந்து கொண்டு பாஜக,ஆர்.எஸ்எஸ் சங்பரிவார் அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இந்துத்துவ சனாதன கருத்துக்களை பொது மேடைகளில் பேசிக்கொண்டு இதுபோன்ற தீர்ப்புகளை வழங்கி வரும் ஜி.ஆர்.சுவாமிநாதன் தொடர்ந்து நீதிபதியாக செயல்படுவதற்கு அடிப்படை தகுதியை இழந்தவராக இருக்கிறார்.

மதவாத சக்திகளின் கலவர முயற்சியை தடுக்கும் வகையில் எந்தவித தயக்கமும் இன்றி துணிச்சலுடன் நடவடிக்கை எடுத்து வரும் திராவிட மாடல் அரசின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டும் அதே நேரத்தில் தமிழ்நாட்டில் சமூக பதற்றத்தை உருவாக்கும் வகையில் நடந்து கொண்டிருக்கும் ஜி.ஆர்.சுவாமிநாதன் அவர்களை நீதிபதி பதவியில் இருந்து நீக்கவோ அல்லது பிற மாநிலத்திற்கு மாற்றுவதற்கோ தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கிறோம். இந்த மதவாத கும்பல்களின் கலவர முயற்சிகளை மக்கள் மன்றத்தின் முன் தொடர்ந்து அம்பலப்படுத்தி பரப்புரைகளை முன்னெடுப்போம் !"

**– "கொளத்தூர் மணி,**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.**
**05.12.2025**

தலையங்கம்

# மதவெறிப் பாடல் குறித்து விவாதிப்பது ஏன்?

மதக் கலவரத்தை தூண்டும் வகையில் திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தீர்ப்பு வழங்கிய ஜி.ஆர்.சுவாமிநாதனின் செயல் குறித்து விவாதிக்க வேண்டுமென்று தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியபோதும், நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அதுகுறித்து விவாதிக்க முன்வரவில்லை. சிறப்புத் தீவிர திருத்தம் குறித்து விவாதமில்லை, மணிப்பூர் குறித்து விவாதமில்லை, இந்தியாவுக்கு எதிரான அமெரிக்காவின் வரி விதிப்பு குறித்து விவாதம் இல்லை. முக்கியத்துவம் வாய்ந்த எந்த விவகாரம் குறித்தும் விவாதம் இல்லை. ஆனால் வந்தே மாதரம் பாடல் குறித்து 10 மணி நேர விவாதம் நடத்தியிருக்கிறது பா.ஜ.க. அரசு.

இப்பாடல் பாடப்பெற்று 150 ஆண்டுகள் ஆனதையொட்டி, நாடு தழுவிய அளவில் நவம்பர் 2025 தொடங்கி ஓராண்டு முழுவதும் கொண்டாட சென்ற அக்டோபரில் ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதுகுறித்து, ஒன்றிய அரசின் பண்பாட்டுத் துறை, அனைத்து மாநில அரசுகளுக்கும், ஒன்றியப் பிரதேசங்களுக்கும் ஓராண்டுத் தொடர் நிகழ்வுகளைக் கொண்டாட விரிவான செயல் திட்டங்களுக்கான பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அதன் தொடர்ச்சியாகத்தான் நாடாளுமன்றத்தில் இப்போது சிறப்பு விவாதம் நடத்தியிருக்கிறார்கள்.

1882-இல் பங்கிம் சந்திர சாட்டர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனரால் வங்க மற்றும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது இந்த வந்தே மாதரம். அவரின் ‘ஆனந்த மடம்’ எனும் நாவலில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது. அப்போது ஆட்சியிலிருந்த கிழக்கிந்திய கம்பெனி, முஸ்லிம் மன்னர்கள் சிலருடன் ஒப்பந்தம் போட்டுக்கொண்டு சென்னை, பம்பாய், கலகத்தா நகரங்களில் காலூன்ற முயற்சித்த காலகட்டம் அது.

முஸ்லிம் மன்னர்கள் ஆட்சியை ஆயுதம் தாங்கிய போர் மூலம் ஒழித்துவிட்டு, இந்து - ஆங்கிலேய ஆட்சியை உருவாக்க வைணவ இந்துக்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதே நாவலின் மய்யமான கருத்து. சத்யானந்தா என்ற கதை நாயகன், இந்து இளைஞர்களைத் திரட்டும்போது, அந்த கதாநாயகன் பாடும் பாடலே ‘வந்தே மாதரம்’.

“நமது தாய்நாட்டை விடுவிப்பதற்கு இனம் - மதம் - பண்பாடு பெருமையைக் காப்பதற்கு, முஸ்லிம்களை ஒழித்தாக வேண்டும்; அவர்களை ஒழிக்காவிட்டால் நமது தர்மத்துக்கு எதிர்காலமே இல்லை; 7 கோடி இந்துக்கள் வாளேந்தி களத்தில் குதிப்போம்” என்பதே வந்தே மாதரம் பாடலின் கருத்து.

வந்தே மாதரம் பாடலைப் பாடி வைணவ இந்து இளைஞர்கள் முஸ்லிம்களை கொலைசெய்து, முஸ்லிம் பெண்களை ‘பாலுறவு’ வன்முறைக்கு உள்ளாக்கி முற்றாக ஒழித்துவிட்டு, காளி தேவி முன் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். அப்போது கதாநாயகன் சத்யானந்தாவிடம், “நாம் தான் முஸ்லிம்களை அழிந்து ஒழித்து விட்டோமே; இந்து இராஜ்யம் வரவில்லையே; ஆங்கிலேயர்கள் தானே ஆட்சி செய்கிறார்கள்?” என்று கேட்கிறார்கள். அதற்கு கதையின் நாயகன் சத்யானந்தா, “இப்போது நமக்கு எதிரிகளே இல்லை; ஆங்கிலேயர்கள் நம்முடைய நண்பர்கள்; அவர்கள் தங்கள் அதிகாரங்களை நம்முடைய விஷ்ணு கடவுளுக்குத் தான் காணிக்கையாக்கியிருக்கிறார்கள்” என்று பதில் கூறுகிறார்.

இப்படி இஸ்லாமியர் ஒழிப்பையும் ஆங்கிலேயர் ஆதரவையும் கொண்டாடுகிற இந்த ‘வந்தே மாதரம்’ பாடலை, ரவீந்திரநாத் தாகூர், முதன்முதலாக 1896-ஆம் ஆண்டில், இந்திய தேசிய காங்கிரசின் கொல்கத்தா அமர்வில் பாடினார். காங்கிரஸ் கூட்டங்களில் இப்பாடல் ஒலிப்பது தொடர்ந்தபோது, இஸ்லாமியர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்தது. முகம்மது அலி ஜின்னா இறுதிவரை ஏற்கவே இல்லை. சர்ச்சைக்குரிய அந்த பகுதிகள் நீக்கப்பட்டுதான் தேசிய பாடலாக அறிவித்தனர்.

இத்தகைய வரலாற்றுப் பின்னணி கொண்ட இப்பாடல் குறித்து, இப்போது விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது? அடுத்த 3 மாதங்களில் மேற்கு வங்கத்தில் சட்டமன்றத் தேர்தல் வரவுள்ளது. அதனால் இப்பாடலை விவாதிப்பதும் விழா எடுப்பதும் செய்துவிட்டு, பார்த்தீர்களா வங்காளத்தை எப்படி பெருமைப்படுத்தியுள்ளோம் என்று அங்குபோய் தேர்தல் பிரச்சாரம் செய்வார்கள். அதுதான் நடக்கும். அதனால்தான் இதுகுறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது. ஆனால் அதற்குப் பதிலளிக்காமல், இஸ்லாமியர்களை இழிவுபடுத்தும் பகுதிகளை நீக்கி, வந்தே மாதரம் பாடலை காங்கிரஸ் அவமதித்துவிட்டது என்று உயர் ஜாதி இந்துக்களை தூண்டிவிடத் தொடங்கிவிட்டனர்.

முதல் இரண்டு பத்திகள் இந்த மண்ணை பெருமைப்படுத்தி எழுதப்பட்டுள்ளது என்பதற்காக, இதனை தேசிய பாடலாக அங்கீகரித்ததே மாபெரும் தவறு. இப்போதோ, அந்த மோசமான பகுதிகளை எப்படி நீக்கலாம் என்று மதவெறியை வெளிப்படுத்தியிருக்கிறது பாஜக பரிவாரங்கள். இந்திய விடுதலைப் போராட்டத்தில் எந்த பங்கும் வகிக்காமல், பிரிட்டிசாருக்கு சேவகம் புரிந்த முன்னோடிகளைக் கொண்ட வரலாற்றுக்குச் சொந்தமான பா.ஜ.க., காலனிய மனநிலையில் இருந்து விடுபடுவோம் என்று பேசிக்கொண்டே, பிரிட்டிசாருக்கு துதிபாடிய ‘வந்தே மாதரம்’ பாடலை இப்போதும் உயர்த்திப் பிடிப்பதே அவர்களின் போலி பிம்பத்தை சுக்குநூறாக உடைத்திருக்கிறது.

# மதக்கலவரத்தை தூண்டும் நீதிபதிகளுக்கு மகுடம்!

*ஆர்.எஸ்.எஸ் அமைப்பை புலனாய்வு செய்து ’கேரவன்’ பத்திரிக்கை விரிவான கட்டுரை ஒன்றை வெளியிட்டு இருந்தது. அதில் ஆர்.எஸ்.எஸின் சட்டப்பிரிவான ஏ.பி.ஏ.பி. அமைப்பு நீதித்துறையில் ஊடுருவி இருக்கும் அதிர்ச்சியான தகவல்களை அதன் அதிகாரபூர்வ பதிவேடுகளில் இருந்து அம்பலப்படுத்தி இருந்தது. நீதிபதிகளாக, வழக்கறிஞர்களாக, சட்டத்துறை அதிகாரிகளாக பல்வேறு மட்டங்களில் ஊடுருவி தங்களின் இந்துத்துவா கொள்கைக்காக நீதித்துறையை பயன்படுத்தி வருகிறார்கள். நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் வழங்கும் தீர்ப்புகளும்,சட்டத்துக்கு எதிரான எல்லை மீறிய செயல்பாடுகளும் இதற்கு சான்றாக நிற்கின்றன. இதற்கான வெகுமதி எதிர்காலத்தில் இவர்களுக்கு காத்திருக்கிறது.*

*அதே நேரத்தில் மதவாத சக்திகளின் மிரட்டலுக்கு பணியாமல் நேர்மையாக மனித உரிமைக்காக குரல் கொடுத்த சென்னையைச் சேர்ந்த மற்றொரு நீதிபதியை பற்றியும் குறிப்பிட வேண்டும். ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியின் பழிவாங்கலுக்கு உள்ளான.*

*இந்த நீதிபதிக்கு இப்போது ஐ.நா.மனித உரிமை ஆணையம் மிக உயர்ந்த பதவியை வெகுமதியாக வழங்கி கவுரவித்திருக்கிறது. அவரது பெயர் "சீனிவாச முரளிதர்." பாலஸ்தீன ஆக்கிரமிப்புப் பகுதியில் கடந்த நான்கு ஆண்டுகளாக நடந்த மனித உரிமை மீறல்களை புலனாய்வு செய்து அறிக்கை தரும் மூவர் குழுவுக்கு இவர் தலைமை தாங்குகிறார். 1980 களில் சென்னையில் வழக்கறிஞராக தொழிலை தொடங்கியவர் பிறகு உச்சநீதிமன்றம் சென்று மனித உரிமைகளுக்கான வழக்குகளில் வாதாடி மனித உரிமையாளராக தன்னை அடையாளப்படுத்தியவர்; மனித உரிமை ஆணையத்தின் வழக்கறிஞராக செயல்பட்டவர். உச்சநீதிமன்ற வளாகத்தில் தனது மாருதி கார் வாகனத்தையே அலுவலகமாக்கி மனித உரிமைகளுக்கான வழக்குகளை நடத்தி புகழ் பெற்றவர்.*

*கோபால் விஷ வாயு தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைப்பதற்கும், டெல்லியில் சீக்கியர்கள் படுகொலையை நடத்திய குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைப்பதிலும் உறுதியாக நின்று தீர்ப்பு வழங்கியவர். அவரது திறமையால் டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியானார். நீதிபதிகளுக்கு தரப்படும் காலனி கால மரபுகளை மறுத்ததோடு தன்னை ’சார்’ என்று அழைத்தால் போதும் என்று அறிவுறுத்தியவர்.*

*2020 ஆம் ஆண்டு டெல்லியில் மிகப்பெரும் மதக் கலவரம் வெடித்தது. மூன்று பாஜக தலைவர்கள் வெறுப்பு பேச்சால் உருவான இந்த கலவரத்தில் இஸ்லாமியர்கள் குறிவைத்து தாக்கப்பட்டனர். காவல்துறையின் அலட்சியத்தை வன்மையாகக் கண்டித்து பாதிக்கப்பட்ட மக்களை மீட்க உத்தரவை அவர் பிறப்பித்தார். அதன் காரணமாக நள்ளிரவில் ஒன்றிய பாஜக ஆட்சி அவரை இடமாற்றம் செய்து பழிவாங்கியது. உச்சநீதிமன்றத்தின் கொலிஜியம் திறமையான இந்த நீதிபதியை தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாகப் பரிந்துரை செய்த போது தமிழ்நாட்டுக்கு அவரை அனுப்பி வைக்க ஒன்றிய பாஜக ஆட்சி கடும் எதிர்ப்பை தெரிவித்தது. சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இவர் வந்துவிட்டால் தங்களின் மதவாத அரசியலை நடத்த முடியாது என்ற ஒரே காரணத்தினால் ஒன்றிய ஆட்சி இந்த நியமனத்தை ஏற்க மறுத்தது. வேறு வழி இன்றி கொலிஜியம் இவரை ஒரிசா உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக மாற்றியது. 2023 ஆம் ஆண்டு அவர் ஓய்வு பெற்றார். நீதிமன்ற வரலாற்றில் இல்லாத அளவுக்கு பெரும் எண்ணிக்கையில் வழக்கறிஞர் திரண்டு அவருக்கு பிரியா விடை கொடுத்ததை வழக்கறிஞர்கள் பெருமையுடன் கூறுகிறார்கள். பதவி ஓய்வு பெற்ற இரண்டு ஆண்டுகளில் இப்போது ஐ.நா. அவரை அழைத்து முக்கிய பொறுப்பை வழங்கியிருக்கிறது.*

*மதக்கலவரத்தை தூண்டும் நீதிபதிகளுக்கு மகுடம்!*
*மனித உரிமைகளுக்காக சட்டத்தின் வழி நிற்கும் நீதிபதிகளுக்கு அவமதிப்பு!*
*இதுவே இந்துத்துவத்தின் மனுநீதி!"*

*விடுதலை இராசேந்திரன்,*
*முகநூல் பதிவு. 08.12.25*

## காதலர்களின் காவல்கோட்டை காவலாண்டியூர்!

*திராவிடர் விடுதலைக் கழகத்தின் வலுவான கோட்டையாக சேலம் மாவட்டம் காவலாண்டியூர் திகழ்கிறது. பாலமலையை ஒட்டியுள்ள அந்த சின்னஞ்சிறு கிராமத்தில் நூற்றுக்கணக்கான தோழர்கள் குடும்பம் குடும்பமாக கழகப் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாடெங்கும் ஜாதி மறுப்பு காதல் திருமணம் புரிவோருக்கு அடைக்கலம் தந்து, இணையேற்பையும் நடத்தி வைக்கும் சமத்துவ மண். காவலாண்டியூரைச் சேர்ந்த தலைமைக் குழு உறுப்பினரான காவை ஈஸ்வரன் இதுவரை ஆயிரக்கணக்கான திருமணங்களை நடத்திவைத்துள்ளார். இதனால் ஜாதிச் சங்கங்களின் அச்சுறுத்தல்கள், கொடுந்தாக்குதலுக்கும் ஆளாகியுள்ளார். ஆனால் ஒருபோதும் தனது இலட்சியத்தில் இருந்து பின் வாங்கியதில்லை. இந்த வரலாறுகள் எல்லாம் நிகழ்காலத்திலேயே ஊடக வெளிச்சம் பெற்று சமூக ஊடகங்களை ஆக்கிரமித்துள்ளது. DW சேனலில் ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் காவலாண்டியூரின் செயல்பாடுகள் குறித்து மிக நேர்த்தியான காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. காவை ஈஸ்வரன், ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்த இணையர்களின் நேர்காணல்கள் அதில் இடம்பெற்றுள்ளன. சமூக ஊடகங்களில் சிறு சிறு துணுக்குகளாக இலட்சக்கணக்கோரிடம் அந்த காணொளி சென்று சேர்ந்திருக்கிறது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் ஆக்கப்பூர்வமான ஜாதி ஒழிப்புப் பணிகளுக்கு கிடைத்த அங்கீகாரம் இது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இல்லை.*

**காணொளியை காண இந்த க்யூ.ஆர். கோடை ஸ்கேன் செய்யவும்.**

முதல் பக்க தொடர்ச்சி..



***திருப்பூர்:*** *மாவட்டக் கழகத்தின் சார்பில் உச்சநீதிமன்றமே, மதக் கலவரவத்தைத் தூண்டும் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனை பதவி நீக்கம் செய்! எனும் முழக்கத்தோடு கண்டன ஆர்ப்பாட்டம் டிசம்பர் 9, 2025 செவ்வாய் மாலை 05.00 மணிக்கு திருப்பூர் ரயில் நிலையம் முன்பு உள்ள பெரியார் சிலை அருகில் துரைசாமி (கழகப் பொருளாளர்) தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தனபால், மாதவன், இனியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகில் ராசு (மாவட்டத் தலைவர்) கண்டனம் முழக்கங்களை எழுப்பினார்.*

*பரிமளராசன் (சமூக ஊடகப் பொறுப்பாளர்), மாநில பேச்சாளர் சேக் அலாவுதீன் (எஸ்டிபிஅய்), அபுசாலி (ம.ம.க மாவட்டச் செயலாளர்), ஏ.பி ஆர்.மூர்த்தி (வி.சி.க. மாவட்டச் செயலாளர்), பாரதி சுப்பராயன் (தலைவர், நவீன மனிதர் குழு), தமிழ் அமுதன் (மார்க்சிய முற்போக்குப் பேரவை), விடுதலை செல்வன் (துணைப் பொதுச்செயலாளர் ஆதித்தமிழர் பேரவை), கார்மேகம் (மக்கள் பாதுகாப்பு இயக்கம்) ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். கழகப் பொருளாளர் துரைசாமி நிறைவுரையாற்றினார். மாதவன் (மாநகரத் தலைவர்) நிகழ்ச்சியை நெறிப்படுத்தினார். மாரிமுத்து (மாநகர துணைத் தலைவர்) நன்றி கூறினார்.*

# தொழிலாளர்களுக்கு விரோதமான புதிய சட்டங்கள்!

## பணிப்பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் பாதக பா.ஜ.க.! - அருண்கோமதி

தொழிலாளர்கள் மீது இதுவரை அரசும் கார்ப்பரேட் நிறுவனங்களும் நிகழ்த்தி வந்த பல்வேறு வகையான உழைப்பு சுரண்டலை சட்டரீதியாக செய்வதற்கான ஒரு ஏற்பாடு புதிய தொழிலாளர் சட்ட தொகுப்பாகும். விடுதலை அடைந்து 70 ஆண்டுகளாக இந்நாட்டின் உழைக்கும் மக்களும் போராடிப் பெற்ற 29 சட்டங்களையும் நீக்கிவிட்டு அவற்றை நான்கு சட்ட தொகுப்புகள் ஆக சுருக்கி புதிய தொழிலாளர் சட்டங்களை நிறுவியுள்ளது ஒன்றிய பாசிச பாஜக அரசு.

இந்த சட்டத் தொகுப்பில் உள்ள பிரச்சனைகளை அறிந்து கொள்வது இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகன்/ள்களின் கடமையாகும். இந்தச் சட்ட தொகுப்பில் உள்ள சிக்கல்களை சுருக்கமாகப் பார்ப்போம்.

### புதிய சட்டத்தின் சிக்கல்கள்!

ஒரு நாளைக்கு 8 மணி நேரம் வீதம் வாரத்திற்கு 48 மணி நேரம் வேலை என்பதே தற்போதைய வேலை நேரமாக உள்ளது. புதிய சட்ட தொகுப்பு இதில் ஒரு முக்கிய திருத்தத்தை செய்கிறது. வாரத்திற்கு ஆறு நாள் வேலை என்பது கட்டாயம் அல்ல. மாறாக ஒரு தொழிலாளி வாரத்திற்கு நான்கு நாட்களுக்குள் 12 மணி நேரம் வேலை செய்து 48 மணி நேர வேலையை முடித்தால் மீதி 3 நாட்களை விடுப்பாக எடுத்துக்கொள்ளலாம் என்கிறது புதிய சட்டத்தொகுப்பு. நடைமுறையில் இது சாத்தியமா? என்றால் நிச்சயமாக கிடையாது. கார்ப்பரேட் பெரு நிறுவனங்கள் தொடக்கத்தில் இதுபோன்ற சலுகைகளை அளித்து பின்னர் 12 மணி நேரம் என்பதே ஒரு நாளைக்கு சராசரி வேலை நேரம் என தொழிலாளிகளின் மீது திணிப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும் இந்த சட்டம் அளிக்கிறது. இது மட்டுமல்லாமல் பரவல் நேரம் என்ற ஒருமுறையும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு தொழிலாளியை காலையில் வேலைக்கு வரவைத்து இடையில் சில மணி நேரங்கள் ஓய்வு கொடுத்து மீண்டும் வேலை செய்ய வைக்கலாம். இதன்மூலம் பெருநிறுவனங்கள் திட்டமிட்டு தொழிலாளியை காலை முதல் இரவு வரை தொழிற்சாலையிலேயே நிறுத்தி வைப்பதற்கான வாய்ப்புகளை இந்த சட்டம் ஏற்படுத்துகிறது.

இரண்டாவதாக வார்த்தைகளின் வரையறைகளில் சில மாற்றங்களையும் இந்த சட்டத்தொகுப்பு கொண்டு வந்திருக்கிறது. உதாரணமாக தொழிலாளி என்பதற்கான வரையறையினை காண்போம்.

18,000 ரூபாய் ஊதியத்திற்கு மேல் வாங்கக்கூடிய ஒரு மேற்பார்வையாளர் தொழிலாளி என்ற வரையறைக்குள் வரமாட்டார். பொதுவாக தொழிற்சாலைகளில் அனுபவம் வாய்ந்த தொழிலாளிகள் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்படுவார்கள். புதிய சட்ட தொகுப்பில் உள்ள இந்த திருத்தத்தின் மூலம் அனுபவமிக்க தொழிலாளிகள் தொழிலாளி என்ற வரையறையில் இருந்து நீக்கப்படுவதன் மூலம் தொழிற்சங்க பாதுகாப்பிலிருந்தும் நீக்கப்படுவார் இதன்மூலமாக இத்தகைய தொழிலாளிகள் மேனேஜ்மென்ட் வகைமைக்குள் கொண்டுவரப்பட்டு வேலைநீக்கம் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

> **ஒரு தொழிற்சாலையில் 100 பணியாளர்கள் வேலை செய்யும் பட்சத்தில் அந்த தொழிற்சாலை அரசின் அனுமதி இன்றி தன்னிச்சையாக மூட முடியாது. இந்த எண்ணிக்கையை புதிய சட்டத் தொகுப்பு 300 ஆக மாற்றுகிறது. இந்தியாவில் உள்ள 90 சதவீத தொழிற்சாலைகள் 300க்கும் கீழான தொழிலாளர்களை கொண்டவைகளே**

### சட்டப் பாதுகாப்பை விலக்குகிறது!

தொழிற்சாலை என்பதற்கான வரையறையிலும் இதைப்போன்ற சிக்கல்கள் உள்ளது.

மின்சாரம் பயன்படுத்தும் இடங்களில் 20 தொழிலாளர்களும் (முன்பு இந்த எண்ணிக்கை 10) மின்சாரம் பயன்படுத்தாத இடங்களில் 40 தொழிலாளர்களும் (முன்பு இந்த எண்ணிக்கை 20) வேலை செய்தால் அது தொழிற்சாலை என்ற வகை மேற்கொள் வரும் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை அதிகரிப்பு இந்தியாவில் உள்ள பல்வேறு சிறு குறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் கோடிக்கணக்கான தொழிலாளர்களை சட்டப் பாதுகாப்பிலிருந்து நீக்கம் செய்கிறது. பணி பாதுகாப்பு விபத்து உள்ளிட்ட எந்த ஒரு பிரச்சனையிலும் தொழிலாளர் சட்டத்தின் கீழ் இவர்கள் அடையாளப்படுத்தப்படாத ஒரு ஆபத்துப் போக்கை இந்த சட்ட தொகுப்பு ஏற்படுத்துகிறது.

ஊதியம் என்பதற்கான வரையறையில் அடிப்படைச் சம்பளமும் பஞ்சப்படியும் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது. ஓவர் டைம், வீட்டு வாடகை படி, பயணப்படி, நைட் சிப்ட் அலவன்ஸ் போன்ற இதர ஊதியங்கள் யாவும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே தொழிலாளியின் ஊதியத்தை எந்த வகையில் குறைக்கலாம் என திட்டமிடும் முதலாளிகளுக்கு இந்த சட்டம் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. தொழிலாளி தனது ஊதியத்திற்கான சட்டப் போராட்டம் நிகழ்த்தி வெற்றி பெற்றாலும் கூட ஊதியம் என்ற வகையில் அடிப்படை சம்பளத்தையும் பஞ்சப்படியையும் மட்டுமே தொழில் நிறுவனங்கள் வழங்கும். இது அடிப்படையில் தொழிலாளிக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளை மறுக்கும் செயலாகும்.

### நிரந்தர பணி உரிமை பறிபோகிறது!

இதே போல பாஜகவும் அதன் ஆதரவாளர்களும் புதிய தொழிலாளர் சட்டம் குறித்து பேசுகையில் *Fixed term employment* குறித்து பெருமை பொங்க பேசுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதில் இருக்கும் சூழ்ச்சி என்னவென்றால் நிரந்தர பணி என்னும் உரிமையை முழுவதுமாக நிராகரித்து குறிப்பிட்ட காலத்திற்கான ஒப்பந்த பணியை இந்த புதிய சட்ட தொகுப்பு அழுத்தமாய் பேசுகிறது. ஒரு தொழிலாளி தனது பயிற்சி காலம் முடிந்தவுடன் பணி நிரந்தர ஆணையையும் நிரந்தரப் பணியாளருக்கான நலத்திட்டங்களையும் ஊதியத்தையும் அளிப்பதற்கான வழிவகைகளை ஏற்கனவே இருந்த தொழிலாளர் சட்டம் உறுதிப்படுத்துகிறது. ஆனால் NEEM, NAPS போன்ற திட்டங்களின் மூலம் இளம் பட்டதாரிகளின் மீது கடுமையான உழைப்பு சுரண்டலை பாஜக அரசு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாகவே தற்காலிக ஒப்பந்த பணியினையும் அதன் அடிப்படையில் நலத்திட்டங்களையும் முன்வைக்கிறது. இதில் இருக்கும் இன்னொரு சிக்கல் என்னவென்றால் ஒரு நிறுவனம் தொழிற்சங்கத்தில் சேரும் ஒப்பந்த பணியாளருக்கு அடுத்த வருடத்தில் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காமல் ரத்து செய்து அந்த தொழிலாளியை வேலை நீக்கம் செய்வதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளது. இதன் காரணமாக ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் தொழிலாளி காலம் முழுக்க தொழிற்சங்கத்தில் இருந்து விலகி தொழில் நிறுவனத்தின் அடிமையாகவே நீடித்திருப்பதற்கான காரணிகளை இந்த சட்டத் தொகுப்பு வழங்குகிறது.

### பெரு முதலாளிகளுக்கு ஆதரவான சட்டம்!

*GIG WORKERS* எனும் சுயாதீன தொழிலாளர்கள் குறித்து புதிய சட்ட தொகுப்பில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. அமேசான், சோமெட்டொ, உபர், ஃபிளிப்கார்ட் போன்ற நிறுவனங்கள் தங்களது டெலிவரி பணியாளர்களை தொழிலாளர்கள் என கூறாமல் பங்குதாரர்கள் எனக் கூறுவதை நாம் பார்த்திருப்போம். இவ்வாறு அழைப்பதன் மூலம் ஒரு தொழிலாளியின் பணி பாதுகாப்பு, ஒப்பந்த ஆவணம், தீர்மானிக்கப்பட்ட வேலை நேரம், மருத்துவ விடுப்பு, விடுப்புடன் கூடிய ஊதியம் என தொழிலாளிக்கு கிடைக்க வேண்டிய பல்வேறு அடிப்படை உரிமைகளை மறுக்கிறது. புதிய சட்ட தொகுப்பு இத்தகைய சுயாதீன தொழிலாளர்களை சுயாதீன தொழிலாளர்களாகவே அங்கீகரித்து அவர்களுக்கு ஒப்பந்த ஆவணம், இ.எஸ்.ஐ., பி.எஃப். உள்ளிட்ட சில உரிமைகளை உறுதி செய்கிறது.

பல ஆண்டுகளாக சுயாதீன தொழிலாளர்களின் கோரிக்கையாக இருப்பது இதுவல்ல. தங்களை ஒரு தொழிலாளியாக அங்கீகரிக்க வேண்டும் என்பதே அவர்களின் அடிப்படை கோரிக்கை. அவ்வாறு அங்கீகரிப்பதன் மூலமே அனைத்து சட்ட பாதுகாப்புகளையும் அவர்கள் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் புதிய சட்ட தொகுப்பும் பெரு முதலாளிகளுக்கு ஆதரவாக அவர்களை இறுதிவரை சுயாதீன தொழிலாளர்களாகவே நீட்டிப்பதற்கான வழிவகைகளை செய்கிறது. இதன் மூலம் பல லட்சக்கணக்கான தொழிலாளிகளின் அடிப்படை உரிமைகளை இந்த சட்டத் தொகுப்பு மறுக்கிறது.

### தொழிலாளர் விரோத சட்டம்!

வேலை நிறுத்தம் என்பது ஒரு தொழிலாளியின் ஜனநாயக போராட்ட வடிவம். அவர்களின் அடிப்படை உரிமை.

புதிய சட்டத் தொகுப்பு வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமையையும் மறுக்கிறது. பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், முடிந்த பின்னரும் ஏழு நாட்களுக்கு வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்கிறது புதிய சட்ட தொகுப்பு. மேலும் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்தாலும் 60 நாட்களுக்கு வேலை நிறுத்தம் செய்வதை தடை செய்கிறது புதிய சட்டத் தொகுப்பு.

முன்பு ஒரு ஒப்பந்ததாரர் 20 பணியாளர்களை வைத்திருந்தாலே அரசின் கீழ் உரிமம் பெற வேண்டும். ஆனால் தற்போது இந்த எண்ணிக்கை 50ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 50 தொழிலாளர்களுக்கு கீழ் வைத்திருப்பவர்கள் அரசின் உரிமம் பெற தேவையில்லை. இவர்களின் கீழ் உள்ள தொழிலாளர்களின் பணி பாதுகாப்பு மற்றும் அடிப்படை உரிமைகள் எதையும் அவர்கள் சட்டத்தின் மூலம் கேட்டு பெற முடியாத சூழலை இது உருவாக்குகிறது.

அதேபோல ஒரு தொழிற்சாலையில் 100 பணியாளர்கள் வேலை செய்யும் பட்சத்தில் அந்த தொழிற்சாலை அரசின் அனுமதி இன்றி தன்னிச்சையாக மூட முடியாது. இந்த எண்ணிக்கையை புதிய சட்ட தொகுப்பு 300 ஆக மாற்றுகிறது. இந்தியாவில் உள்ள 90 சதவீத தொழிற்சாலைகள் 300க்கும் கீழான தொழிலாளர்களை கொண்டவைகளே. இத்தகைய எண்ணிக்கை மாற்றம் வெளிநாட்டு நிறுவனங்கள் எத்தகைய முன்னறிவிப்புமின்றி தங்களது தொழிற்சாலைகளை மூடிவிட்டு தொழிலாளர்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்குவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது.

புதிய சட்டத்தொகுப்பு துறைசார் சட்டங்களையும் நீக்கி உள்ளது இதன் காரணமாக துறைசார் பிரச்சனைகளுக்காக போராடி பெறப்பட்ட சட்டங்கள் பயனற்றதாகி இருக்கிறது.

இது மட்டுமல்லாமல் இன்னும் பல்வேறு தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை சட்டரீதியாக செய்வதற்கான அனைத்து வாய்ப்புகளையும் புதிய சட்டத் தொகுப்பு வழங்குகிறது. 2019-2020இல் மசோதாக்கள் வந்தாலும் தொழிலாளர்களின் தொடர்ச்சியான எதிர்ப்பின் காரணமாக உடனடியாக அமல்படுத்தாமல் இருந்தது ஒன்றிய அரசு. இந்தியாவின் அதிகபட்சமான உழைப்பு சக்திகளைக் கொண்ட பீகார் மாநிலத்தின் தேர்தல் முடிந்தவுடன் இந்த புதிய சட்டத் தொகுப்பை அமல்படுத்திருக்கிறது பாஜக அரசு. இந்தச் சட்டத் தொகுப்பை எதிர்க்காமல் ஏற்றுக் கொள்வது என்பது பெரும்பான்மை உழைக்கும் வர்க்கத்தின் நூற்றாண்டுகால போராட்டத்தை வீணடிப்பதற்கு சமம். ஒன்றுபட்ட விவசாயிகளின் போராட்டம் விவசாய சட்டத்தை திரும்ப பெற செய்தது. அதேபோல புதிய சட்டத் தொகுப்பையும் நம் போராட்டத்தின் மூலம் திரும்ப பெறச் செய்வோம்.

**பெரியார் குறித்த ஜீவாவின் விமர்சனங்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்துவரும் பதில் அடுத்த இதழில் தொடரும்.**

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# இராயப்பேட்டையை திராவிட கோட்டையாக்கிய செயல்வீரர் பத்ரி நாராயணன்

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். கழகத் தோழர் பத்ரி நாரயாணன் பற்றிய கடந்த இதழின் தொடர்ச்சி...**

எண் 61, வெங்கடாசலம் தெரு, ராயப்பேட்டை என்ற முகவரி கொண்ட ஒற்றைக் குடித்தன வாடகை வீடு, ஒரு உடைந்த நாற்காலி, ஓலைப்பாய், மர பீரோ... பத்ரி நாராயணனுக்கு வசதிகளும் வாய்ப்புகளும் அதற்குமேல் இல்லை. ஆனால், அவருடைய கண்ணசைவுக்கே கட்டுப்படும் நூற்றுக்கணக்கான இளைஞர்களை 1990-இல் உருவாக்கி வைத்திருந்தார் அவர். 1980-களில் திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு, பத்தாண்டுகளிலேயே பலமான கோட்டையாக ராயப்பேட்டையை மாற்றிய செயல் வீரர்.

**“சராசரி மனிதர் என்றால் மறைந்து, 21 ஆண்டுகள் ஆன பின்னர் குடும்பத்தினரே மறந்திருப்பார்கள். ஆனால், பத்ரி நாராயணனை அப்பகுதியில் வாழும் சாமானிய மக்கள்கூட இன்னும் மறக்கவில்லை."**

ராஜீவ் காந்தி படுகொலையில் கைதாகி, 30 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த எழுவரை, விடுவிக்கக்கோரி அமைச்சரவையில் தீர்மானம் இயற்றி, உச்சநீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டி சட்டப்போராட்டம் நடத்தி வெற்றி கண்டது இன்றைய திராவிட மாடல் அரசு. ஆனால், படுகொலை நடந்த காலகட்டம் என்பது மிகவும் கொந்தளிப்பானது. பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் முதலில் 26 பேருக்கு தூக்குத்தண்டனை வழங்கியது. அந்த கொந்தளிப்பான காலகட்டத்திலேயே மரண தண்டனைக்கு எதிராக இயக்கம், ராயப்பேட்டையில் மரண தண்டனை எதிர்ப்பு மாநாடு, ஒரு லட்சம் ரூபாய் வழக்கு நிதி வசூல், டெல்லிவரை சென்று சட்டப் போராட்டம் என துணிச்சலுடன் செயல்பட்டவர் பத்ரி. அதன் விளைவாக, 19 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

கிளைக்கழகங்கள் உருவாக்குவது, பெயர்ப்பலகை திறப்பது, பிரச்சாரங்களில் ஈடுபடுவது என எப்போதும் பரபரப்பாக காணப்பட்ட பத்ரி, 1993-ஆம் ஆண்டில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணியை அழைத்துவந்து, வி.எம். தெருவில் பெரியார் சிலை ஒன்றை நிறுவினார். அந்த பெரியார் சிலைதான் கருப்புச்சட்டைகள் கூடுமிடம். பெரியார் சிலைக்கு அருகிலேயே பிரபலமான நாகாத்தம்மன் கோயிலும் இருக்கிறது. ஆனால் பொதுமக்கள் பிரச்னை என்றால் கோயிலுக்குச் செல்வதை விட, பெரியார் சிலைக்கு அருகே இருக்கும் பத்ரி நாராயணனிடம் செல்வதுதான் வழக்கமாக இருந்தது. பெரியார் சிலையால் பக்தியும் பாதிக்கப்பட்டதில்லை, கோயிலால் பகுத்தறிவுப் பிரச்சாரமும் தடைபட்டதில்லை.

திராவிடர் கழக இளைஞர் அணியின் சார்பில் பனகல் பூங்காவில், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங் பங்கேற்ற மாநாட்டின் பின்னணியில் இருந்து கடுமையாக உழைத்ததுடன், பெரும் எண்ணிக்கையில் இளைஞர்களைப் பங்கேற்கச் செய்தார். 1996-இல் பத்ரி நாராயணன் திராவிடர் கழகத்தில் இருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் விலகி, விடுதலை இராசேந்திரனோடு இணைந்து பெரியார் திராவிடர் கழகமாகச் செயல்படத் தொடங்கினார். பத்ரி நாராயணனின் வாடகை வீடுதான் பெரியார் திராவிடர் கழகத்தின் முதல் தலைமையகம். சென்னை ஐ.ஐ.டி-யின் தலித் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்து பெரும் இயக்கத்தை முன்னெடுத்தார். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம் இப்பிரச்னையில் தலையிடும் அளவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது அந்தப் போராட்டம். 2001-இல் பேராசிரியர் மு.இராமசாமியின் கலகக்காரர் பெரியார் நாடகத்தை, காமராசர் அரங்கு நிரம்ப நடத்தினார். வள்ளுவர் கோட்டத்தில் சாதி ஒழிப்பு மாநாட்டை நடத்தினார். சுயசாதி எதிர்ப்பு, சாதி மறுப்பு- சுயமரியாதைத் திருமணங்களை முன் நின்று நடத்தி வைத்தல், மத நல்லிணக்கம் என தீவிரமாகச் செயல்படலானார் பத்ரி

# அம்பேத்கர் நினைவுநாளில் கழகம் மரியாதை!

**கோவை:** புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளில், கோவை மாநகர கழகத்தின் மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் தலைமையில் காந்திபுரம் பெரியார் சிலை முன்பு தபெதிக அமைத்த அம்பேத்கர் படம் முன்பு காலை 9.30 மணிக்கு கோவை தோழர்கள் புகழ் வணக்கம் செலுத்தினர்.



இந்நிகழ்வில் கோவை மாவட்டத்தில் நிலவும் ஜாதிய தீண்டாமை வன்கொடுமைகளுக்கு தீர்வு கிடைக்கும் வரை உறுதியாகப் போராடுவது என்று உறுதி ஏற்றனர். பன்னீர்செல்வம், வெங்கட், நிர்மல் குமார் உரையாற்றினர் தோழர்கள் கிருஷ்ணன், மாதவன், சதீஷ், நவீன், தரணி, சத்தியமூர்த்தி, மேட்டூர் பாலு, ஆதரவாளர்கள் சங்கனூர் கார்த்தி, பரத், இலக்கியா கலந்து கொண்டு புகழ்வணக்கம் செலுத்தினர்.

**திருப்பூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பாக புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளில், அவரது நினைவைப் போற்றும் விதமாக மாநகர அமைப்பாளர் இரா. சரசுவதி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஜாதி ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



கழகப் பொருளாளர் சு.துரைசாமி, வீ.சிவகாமி (தலைவர்,தமிழ்நாடு அறிவியல் மன்றம்), துரை. பரிமளராசன் (ஊடகப் பொறுப்பாளர்) ஆகியோர் கருத்துரையாற்றினர்.

முகில் இராசு (மாவட்டத் தலைவர்), பி.சங்கீதா (மாவட்ட அமைப்பாளர்)மா. இராமசாமி (தெற்கு பகுதிச் செயலாளர்), தமிழ் அமுதன் (மார்க்சிய முற்போக்காளர்கள் பேரவை), தனபால் (மாநகர தலைவர்), சி.மாதவன் (மாநகரச் செயலாளர்), மாரிமுத்து (மாநகரத் துணைத் தலைவர்), அய்யப்பன் (வடக்கு ஒன்றிய அமைப்பாளர்), முத்து (மாநகர அமைப்பாளர்), தனகோபால் (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), சிரிஜா, இனியன், தமிழ்நாடு மாணவர் கழக தோழர்கள் இரா. ஈழமாறன், கார்த்திக், யாழினி, யாழிசை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் சிபி செல்வம் நன்றி கூறினார். நிகழ்வில் மாவட்ட, மாநகர, ஒன்றிய தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



**சேலம் கிழக்கு:** மாநகர கழகத்தின் சார்பில் 06.12.2025 புரட்சியாளர் அம்பேத்கர் 69-வது நினைவு நாளையொட்டி காலை 10.00 மணியளவில், சேலம் அரசு கலைக் கல்லூரி அருகில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கொள்கை முழக்கமிடப்பட்டது.

இதில் டேவிட் (சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர்), பாலு (சேலம் மாநகரத் தலைவர்), ஆனந்தி (சேலம் மாநகரச் செயலாளர்), தேவராஜ் (சேலம் மாநகர அமைப்பாளர்), இளம்பிள்ளை பகுதி தோழர்கள் சௌந்தரராஜன், சதா, வெற்றிமுருகன் (சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்), பிரபு (சேலம் மாநகரப் பொருளாளர்), ராஜசேகரன், சுதர்சன், தர்ஷன், தர்ஷிதா, அவினேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சேலம் மேற்கு:** மாவட்டக் கழகத்தின் சார்பில் 06.12.2025 புரட்சியாளர் அம்பேத்கர் 69வது நினைவு நாளையொட்டி காலை 10.30 மணியளவில், மேட்டூர் அச்சங்காடு பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கொள்கை முழக்கமிடப்பட்டது.



இதில் மேட்டூர், கொளத்தூர், மேட்டூர் ஆர்.எஸ், நங்கவள்ளி, காவலாண்டியூர் ஆகிய பகுதிகளில் இருந்து தோழர்களும், பொறுப்பாளர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி:** மாவட்டக் கழகம் சார்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் 69 வது நினைவு நாளில் சங்கராபுரத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு காலை 11 மணியளவில் தோழர் சி.சாமிதுரை தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் தோழர்கள் மா.குமார் (ரிஷிவந்தியம் ஒன்றிய தலைவர்), இரா.கார்மேகம் (ரிஷிவந்தியம் ஒன்றிய அமைப்பாளர்), தோழர்கள் மு.நாகராஜ் கி.ஆனந்தன் மு.ராவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





**கடலூர்:** மாவட்டக் கழகத்தின் சார்பாக டிசம்பர் 6 சமத்துவத் தந்தை புரட்சியாளர் அம்பேத்கர் 66-வது நினைவு நாளில் கடலூரில் மஞ்சுகுப்பம் பகுதியில் காலை 10 மணி அளவில் புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்து கொள்கை முழக்கம் செய்தனர்.

கடலூர் மாவட்டத் தோழர் பெரியார் சிவா மற்றும் தோழர்கள் செங்குளத்தான், குப்புசாமி, பிரபு ஆகியோர் பங்கேற்றனர். இளம் பாடகர் திராவிட மகிழன் புகழ் வணக்க முழக்கமிட்டார்.

**சென்னை:** மாவட்டக் கழகத்தின் புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளையொட்டி அடையாறு அம்பேத்கர் மணிபண்டபம், மந்தைவெளி அம்பேத்கர் சிலை, சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி தலைமையில், கழகத் தோழர்கள் மாலை அணிவித்து கொள்கை முழக்கமிட்டனர். தோழர் செல்வம் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இந்நிகழ்வில், தபசி குமரன்(தலைமை நிலையச் செயலாளர்), த கு. அன்பு தனசேகர்(லைமைக் குழு உறுப்பினர்), மா. வேழவேந்தன் (மாவட்டத் தலைவர்), மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, இராவணன் (மாவட்டத் துணைச்செயலாளர்), ப. அருண்( மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), அருண் கோமதி (தாம்பரம் நகர அமைப்பாளர் ), மயிலை பகுதித் தோழர்கள் சுகுமாரன், மனோகர், சிவா, முழக்கம் உமாபதி, இரண்யா, சு. கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), த.நா. சூர்யா(பகுதி அமைப்பாளர்), பேரன்பு (தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர்), அமைப்பாளர் இளவரசன், முழக்கம் செய்தியாளர் பிரசாந்த், சைதை சிவா, தேன்மொழி (IT WING), அசோக் வீரா, பிரவீன், அஸ்வின், மோகன், அருள்தாஸ், ஏசுகுமார், அகராதி, குமார், எழிலரசன், மு.க. தினேஷ் குமார், லீலா உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர்.



புரட்சிப் பெரியார் முழக்கம்

ஆண்டு சந்தா ரூ.300/- | ஐந்தாண்டு சந்தா ரூ.1500/-

தொடர்புக்கு: 15. தோழமை, வெங்கடேஸ்வரா நகர், பெருங்குடி, சென்னை 600096. | பேச: 63697 76351

முழக்கம் தொடர்பான சந்தேகங்களுக்கு மேற்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

மின்னஞ்சல்: newsdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 12, 2025

Owner and Publisher by : k. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, chennai - 600 014.
Editor ; k. Rajendran